முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.06.2023**, வெள்ளிக்கிழமை

1. தானதரும பலம்தனை அடைந்து
தயவான மனநலம் காண
ஞானமாக வரம் தருகின்ற
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது மிதுன திங்கள்
வரங்களாக அட்டம திகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 08 ம் நாள், 23.06.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சுந்தரமூர்த்தி யானும்
அறிவிப்பேன் உலக நலம்பெற
ஆசிதந்து அரங்க ஞானி தரும்
ஆற்றல்மிக்க ஞான வழிகள் தன்னை
4. தன்னையே மனம் தளர்வின்றி
தக்க சரணாகதி கொண்டு
மண்ணுலகில் ஏற்றுத் தொடர
மகத்துவம்பட சக்தி கூடும்
5. சக்திநிலை பெருகும் மக்களே
சகலருக்கும் இந்த அறிவை
பக்திவழி கொண்டுச் சென்று
பாமரரும் அறிய அடைய வகை செய்ய
6. செய்யவே உலகை வதைக்கின்ற
செயல்பாடுகளை களைந்து
அய்யமின்றி அநீதிகளை விரட்டி
ஆபத்தானவைகள் தேசத்துள் வாரா

7. வாரா மீட்பு வடிவமாக
வணங்கி ஞானிகள் பலமுடன்
அறமே நிலைத்து நிற்க
அனைத்தையும் வென்று சிறப்பர்
8. சிறப்பான வாழ்க்கை முறையாக
சித்திகளை அடையும் வண்ணம்
அறத்தின் பாதை விட்டு அகலா
அரங்கன் காட்டும் தருமம்
9. தருமத்தை தடைபடா வளர்க்க
தயவுடன் வாழ வழி காட்டும்
ஆறுமுக அரங்கன் சன்மார்க்க
அருள் வழிதனை இணைத்து வர
10. வருகவே வருங்காலம் மாற்றம்
வரமாக மக்களை தேற்றி
தருமமோடு ஞானவான்களாக்கி
தரணி காக்கும் ஞானப்படைகள் ஆவர்
11. ஆவரே அரங்கன் தேடலில்
அனைவரும் தேறி சிறந்து
அவதார ஞானிகள் ஆவர்
அகிலத்தில் ஞானஆட்சித் தருவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—